விலை ரூபா 1.25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 6 ஸபர் 18 இதழ் 255

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-10-1986

மட்டு. மாவட்டத்தில்

## படையினர் - புலிகள் மோதல் 3 கமாண்டோக்கள் பலி

யாழ்ப்பாணம், வியா. மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறுமுகாமிலிருந்து ரோந்து சென்ற கமாண்டோக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடிச் சமரில் 3 கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமுற்றனர்.

நேற்று முன்தினம் காலை இந்த நேரடிச் சமர் நடைபெற்றதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று முன்தினம் 10 மணியளவில் கரடியனாறு முகாமில் இருந்து 5 ஜீப்வண்டிகளிலும் 2 பவல் ஆமட்காரிலுமாக 50-க்கும் மேற்பட்ட கொமாண்டோக்கள் ரோந்து சென்றனர். இவர்கள் மீது மயிலவெட்டிக்கும் பூமாச்சோலைக்கும் இடையில் வைத்துஎமது வீரர்கள் நேரடி தாக்குதல் நடத்தியதில் ஸ்தலத்திலேயே

(8ம் பக்கம் பார்க்க)

இலங்கைஅரசின் இறுதியோசனைகள், கூட்டணியின் மாற்றுத் திட்டங்கள்

# போராளிகள் குழுக்கள் பரிசீலிக்க கையளிக்கப்படும்

அரசு தேசிய காணி ஆணைக்குழு அமைக்கவேண்டும்

சென்னை, ஒக்டோபர் 22

இலங்கை அரசு இறுதியாக இந்திய மத்திய அரசாங்கத்திடம் கையளித்த இலங்கை இனப்பிரச்னைக்கான உத்தேச யோசனைகளும், அதற்குத் தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்த பதில்களும், மாற்று யோசனைகளும், இன்னும் சில நாட்களில் ஐந்து தமிழ்த்தீவிரவாதக் குழுக்களிடமும் அவர்களது பரிசிலனைக்காகக் கையளிக்கப் படவுள்ளது.

தமிழ்த்தீவிரவாத இளைஞர் குழுக்களினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் பிரதிலிப்பையும் பொறுத்தே இந்திய அரசாங்கம் எவ்வாறு இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான நடைமுறைகளையிட்டுத் தீர்மானிக்கவுள்ளதென இந்திய அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டது

கொழும்பு. புதன்.

மன்னார் மாவட்டத்தில் நேற்றுக்காலை அமுலாக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுமாலை 6 மணிக்கு நீக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் சில பகுதிகளில் இராணுவம் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகவே ஊரடங்குச்சட்டம் போடப்பட்டதாகத் தெரியவருகிறது. (சி-கே)

யாழ். வர்த்தகர் சங்கமும்

## ஐ.நா.தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க முடிவு

யாழ்ப்பாணம், வியாழன். நாளை நடைபெறும் ஐக்கிய நாடுகள் தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு அனைவரையும் முன்னணி விடுத்த வேண்டுகோளையேற்று யாழ். வர்த்தக சங்கமும் அன்றைய தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்கவுள்ளது.

இதுபற்றி வர்த்தகர்களுக்கு

(5ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னை பேச்சுவார்த்தை:

## பெரும்பாலான தமிழ் மக்கள் ஆதரவு

சென்னை. அக். 22

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்குமுகமாக அடுத்து நடைபெறவிருக்கும் 3ம் சுற்று பேச்சுவார்த்தைகளுக்கு யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான தமிழ்மக்கள் ஆதரவளிக்கிறார்களென தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் தினபலர்' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இனப்பிரச்னையை சமாதானமானமுறையில் தீர்த்துவைப்பதற்கு 50வீதமான போராளிகள் விரும்புவதாகவும் இந்தியாவிலுள்ளதுபோல் மாநில சுயாட்சியை பெரும்பாலான தமிழ்மக்கள் வரவேற்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் அடுத்த கட்டப்பேச்சுவார்த்தைகளில் போராளிகள் கலந்துகொண்டு அங்கு தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பற்றி ஆராயவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி-கே]

## அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, புதன்.

அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் பெரும் தொகையை ஈடுசெய்யும் முகமாக அமைச்சரவை நேற்று பலஅமைச்சுகளின் உயரதிகாரிகளை சந்தித்தது.

திறைசேரியைச் சேர்ந்த பல அதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சகல அமைச்சுகளும் செலவினங்களை குறைத்து துண்டு விழும்தொகையைக் குறைப்பதற்கு ஒத்துழைக்கும்படி இங்கு கேட்கப்பட்டுள்ளன. (சி)

மன்னாரில் போராளிகளுக்கு எதிராக

## பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்கும் அரசின் திட்டம்

- பி பி. ஸி-

யாழ்ப்பாணம், வியா. மன்னாரில் தமிழ் போராளிகளுக்கு எதிராகப் பெரியதோர் இராணுவ நடவடிக்கையை எடுக்கு முகமாக நேற்றுக் காலை முதல் மாலை வரை ஊரடங்கு உத்தரவுச் சட்டத்தை இலங்கை அரசு பிறப்பித்திருந்ததாக பி பி ஸி தெரிவித்துள்ளது.

தமிழ் போராளிகளால் கடந்த சில வாரங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட இரு சிங்கள இராணுவத்தை மீட்கும் முயற்சிகளில் இலங்கை மக்கள்

(5ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக

## மாணவர் நிர்வாகக்குழு கோரும் விபரங்கள்

யாழ்ப்பாணம், வியாழன். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 18 மாதங்களுக்கு மேல் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களினதும் காணாமல் போனவர்களினதும் விபரங்களை தமக்குஅறிவிக்கும்படி யாழ் பல்கலைக்கழக மாணவ நிர்வாகக்குழு கேட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களின் முழுவிபரங்களையும் அவர்களின் பெற்றோர் உறவினர்கள் நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ 'மாணவர் அவை'' யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்றமுகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (மா)

முல்லை மாவட்டம்: ஜீப்பில் சென்ற

## இராணுவம் மீது மக்கள் விடுதலைப்படை தாக்குதல்

ஆறு சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம்,வியா. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜீப்வண்டியொன்றில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தமது இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 6 சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் இருவர் பலத்த காயங்களுக்குள்ளானதாகவும்

(5ம் பக்கம் பார்க்க)

## "ஒழுங்குவிதி மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்"

மினிசினிமா ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் வியா, மினி சினிமா ஒன்றியத்தின் ஒழுங்கு விதிகளை மீறி செயற்படும் மினி சினிமாக்கள் மீதும், நுழைவுச்சீட்டுக்களில் மோசடி செய்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை

(5ம் பக்கம் பார்க்க)

மன்னார் அடம்பனில்

## புலிகள் - இராணுவம் கடும் சமர் படையினர் ஐவர் பலி!

ஹெலியிலிருந்து சூடு: பொம்பர் குண்டுவீச்சு

[நமது நிருபர்]

மன்னார் அடம்பன் பகுதியில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு மிடையே மீண்டும் நடைபெற்ற உக்கிரமான போரில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பலர் படுகாயமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போராளிகள் தரப்பிலும் ஒருவர் பலியானார்.

நேற்று முன்தினம் மாலை தொடக்கம் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை இரு தரப்பினருக்குமிடையே நேரடி மோதல் நடைபெற்று வருவதை அறிய முடிகிறது.

இராணுவத்தினருக்கு உதவியாக ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டன. இரு பொம்பர் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. இதனால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த 12ம் திகதி அதே இடத்தில் இடம்பெற்ற நேரடி சமரில் இராணுவத்தினர் தரப்பில் 24பேர் கொல்லப்பட்டதும் 40பேர் காயமுற்றதும் விடுதலைப்புலிகள் தரப்பில் மன்னார் மவட்ட தளபதி விக்டரும் லெப்டினட்ரேமும் பலியானது தெரிந்ததே.

கடந்த இருநாட்களாக நடைபெற்ற சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தூர் மேற்கில் நல்ல சூழலில் அமைந்துள்ள 7½ பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: வீடியோ வசந்த் அன் ரெக்கோடிங் பார், புத்தூர். (C5315

அளவெட்டி வடக்கு கூட்டுறவாளர் வீதியில் MPCS இற்கு அருகாமையில் கிணற்றுப்பங்குடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இல C 5319 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C5319)

வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 6பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: கொழும்பு 34976. [C 5343]

கால்நடைகளுக்கு உகந்த விஷேச "மினரல் மிக்சர் கல்சியப் பவுடர்" மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M G M, 781, K K S Road, and 208, 1 stCross St, Jaffna. T: P. 22611 [C 5073]

தீபாவளி மலிவு விற்பனை: புதிய, நவீனமான உருக்குத் தளபாடங்கள் பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T V. Stands, Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான தளபாடங்கள் விலை குறைப்பு தீபாவளிவரை மட்டுமே. கவிதாஸ்-டைனமிக்கா காட்சியறை. இல: 22, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24149. [C 1491]

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய் [C-5042]

## தேவை

தையல் வேலைக்கு அனுபவமுள்ள உதவியாளரொருவர் தேவை. வேதனம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: 7, சிவப்பிரகாசம் வீதி, ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம் [C 5350]

மானிப்பாய் பகுதியில் பிரபல்யமான இடத்தில் தனியார் கல்வி நிறுவனம் நடத்துவதற்கு உகந்த வீடு வாடகைக்கு தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. C 5326, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (C5326)

பிரயாண முகவர் நிலையமொன்றுக்கு பெண் வரவேற்பாளர்கள் தேவை. ஆங்கிலம் சரளமாகப் பேசுபவராயும், சுருக்கெழுத்து தட்டெழுத்துச் செய்வதில் கல்விச் சான்றிதழ்களும் பெற்றுள்ளவரும் வயது 22—30 வரை இருப்பதும் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவு திகதி: 31-10 86. தொடர்பு: Gloria Travels, சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய். (A-1485)

### WANTED

A Business Establishment requires immediately a Female Clerk fluent in English with the knowledge of Book-Keeping and Office Routine. Preference will be given to holders of Certificate of Diploma in Book-Keeping. A 1484, C/O, Eelanadu Limited. (A 1484)

### SERVICE

Laminating Protects and Preserves for Generation permanently seal all your valuable certificates photos and documents in tough crystal clear polyester films Gnanams StudioClock Tower Road, Jaffna or Pathinathan, 118 Forth CrossStreet, Jaffna (C5335)

### வகுப்புகள்

GCE O/L Dec. 86. மாதிரி ஆங்கில வினாத்தாள் மீட்டல் வகுப்புகள். இலவச வினாப்பத்திரங்களுடன் ஆரம்பம் கிழமை நாட்களிலும் வார இறுதியிலும் 2-11-86/ 3-11-86 விபரங்கட்கு தொடர்பு: S B IYAR, 12 வைமன்வீதி, நல்லூர். (C5347)

Radio-TV, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைண்டிங், தட்டெழுத்து சுருக்கெழுத்து 25-10-86ல் ஆரம்பமாகவுள்ளன. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 5302

### 1-வது பிறந்ததின வாழ்த்து



செல்வன் வருண்

வர்த்தகவிளானைச் சேர்ந்த சிவபாலன் கமலேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் வருண் இன்று தனது 1-வது பிறந்தநாளை டென்மார்க்கில் சிறப்பாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சுனீதா, துஷி, தமி, மயூரன், பிரபா, சஞ்சி, சுதா, சுகிர்தா, சுஜந்தன், சத்தியன், சுகன்யா, சாரங்கன், லக்ஸ்மன், மிதுனா, லண்டன் சித்தப்பா, சிம்பாவே மாமா, மாமி, குயிலி, சவுதி மாமா, இந்தியா மாமா, கனடா மாமா, மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனின் அருள்பெற்று பல்லாண்டு வாழவாழ்த்துகின்றனர். [A 5342

### தவறிவிட்டது

20-10-86 திங்கட்கிழமை காலை 10-30 மணியளவில் கேரதீவு யாழ்ப்பாணம் போக்குவரத்து லைனிலிருந்து மினிவான் இல: 30ஸ்ரீ 4394 வாகனத்தில் [போர] பசளை [25 கிலோ] பையுடன் அரிசி, உடுதுணி, புத்தகங்களுடன் தவறிவிட்டது. இதை கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும். வே. கருணாகரன், இல: 9, பலாலி வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 5341)

வவுனியா பஸ் நிலையத்தில் காணாமல் போன எனது 211730080V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையினை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சி. கந்தையா, ரயில்வே ஊழியர், வேப்பங்குளம், ஓமந்தை. (C 1496)

### பட்டப்பின் கல்வி டிப்புளோமா நேர்முகப்பரீட்சை (1986/87)

மேற்படி பாடநெறிக்கான நேர்முகப்பரீட்சை 5-11-1986 இல் பல்கலைக் கழகத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்பட்டியல் பல்கலைக்கழக கலைப்பீட அலுவலக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

பதிவாளர்.

(A 1495)

### முதலிலேயாக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

காங்கேசன்துறை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவஞானம் கைம்பெண் கனகேஸ்வரி என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம்
வழ. இல. ரி/291

சிவஞானம் ஜீவகுமாரன் கல்லூரி வீதி, காங்கேசன் துறை.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களுக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளதெனவும் 1986ம் ஆண்டு திசம்பர் மாதம் 3-ம் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயாக்கப்படும் முற்றுனகட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1986ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைவு
மு யோககுமார்
மனுதாரின் சட்டத்தரணி

[C-5324]

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் இல. 93, மானிப்பாய் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி யோகநாதன் என்பவரின் மரணசாதன மற்ற சொத்துக்களின் விடயத்தில்:

மரணமெய்தியவர்:

கந்தசாமி யோகநாதன் கைம்பெண் சூரியபிரபா, இல 41, ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்.

வழ. இல. T: 3982

எதிராக

1. யோகநாதன் தாமிரகரம், இல 41, ஸ்ரான்லிக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
2. செல்லப்பா பொன்னுத்துரை, இல. 41 ஸ்ரான்லிக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பராயமற்ற 1ம் எதிர்மனுதாரின் வழக்குப்பாதுகாவலர்)

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆந் திகதி மு. ப. 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்காகக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1986 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ஆந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

தயாரித்தவர்கள்:
பரராஜசிங்கமும்,
அம்பிகைபாலனும்.
மனுதாரின்
சட்டத்தரணிகள்.

(C 5304)

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
சரவணை தம்பாப்பிள்ளை
மண்ணுலகு: 10-09-1931
விண்ணுலகு: 24-09-1986

அன்பாய், பண்பாய் ஆதரவுடன் எம்முடன் திகழ்ந்த குடும்ப விளக்கே நீ எம்மை விட்டகன்றாலும் நீர் விட்டுச்சென்ற பணி எம்மை விட்டகலாதையா. 24 - 10 - 86 அன்று நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரியைகளில் பங்குகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மனைவி தபூரணம், பிள்ளைகள் தயாநிதி, தயாறஞ்சன், சுதாகரன், பதமஜெயன் கேதீஸ்வரி கருணசீலன். மயிலணி வடக்கு சுன்னாகம். [C 5346]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

நவநாகரீக டிசைன்களில் உங்கள் மனதிற்கு பிடித்தமான பிடவைத் தினிசுகளையும்

திருமண வைபவங்களுக்கு ஏற்ற

★ மணிப்புரி ★ பெனாரஸ்
★ காஞ்சிபுரம் ★ பட்டுவேட்டி

முதலானவற்றையும்

சகலவிதமான எவர்சில்வர் தினுசுகளையும் பரந்தனில் தெரிவுசெய்துகொள்ள சிறந்த ஸ்தாபனம்

**சாயி கீத்தா ரெக்ஸ்ரையில்ஸ்**

முல்லைத்தீவு வீதி, பரந்தன். (C 5349)

### சுண்டிக்குளி மேற்கு இறை விழிப்புக்குழு

மேற்படி விழிப்புக்குழு அதன் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டியபோது அங்கு குழு தொடர்ந்து இயங்குவதில் ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலைகளால் குழுவில் கூடியிருந்த செயற்குழு அங்கத்தவர்களின் ஏகமனதான தீர்மானித்தின்படி, குழு அவர்களாலேயே கலைக்கப்பட்டுள்ளது 20-10-86 தொடக்கம் இக்குழு செயற்படாதென்பதை நிர்வாகத்தினர் சகலருக்கும் அறியத்தருகின்றனர். இதனால் எவருக்கும் அசௌகரியம் ஏற்பட்டால் அதனையிட்டு வருந்துகிறோம்.

நன்றி.

ச. வேலாயுதம்பிள்ளை,
செயலாளர். [C 5348]

# தமிழ்நாடு அமைச்சரவையில் பாரிய மாற்றம்

## பல அமைச்சர்கள் பதவிநீக்கம்

**சென்னை, அக்-22**

**தமிழ்நாடு அமைச்சரவையில் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் பத்து பிரபல அமைச்சர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் புதிதாக ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

அமைச்சரவையில் பல புதிய மாற்றங்களை மேற்கொள்ள விருப்பதாகக் கடந்த வாரம் முதலமைச்சர் அறிவித்ததைத் தொடர்ந்தே நேற்று முன்தினம் அவர் இப்புதிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

24 அமைச்சர்களைக்கொண்ட மந்திரி சபையிலிருந்து திருவாளர்கள்: ஆர் எம். வீரப்பன், சி அரங்கநாயகம், கே. காளிமுத்து டாக்டர் எச். வி. ஹண்டே, ரி வீராசாமி, என். நல்லுசாமி, எம். ஆர். கோவேந்தன், திருமதி கோபதி ஸ்ரீநிவாசன், திருமதி விஜயலட்சுமி பழனிசாமி திரு. வை. எஸ். எம். யூசுப் ஆகிய பத்து அமைச்சர்களும் பதவியிழந்ததாலும் புதிதாக முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி பதவியேற்றுள்ளதாலும் அமைச்சரவை அங்கத்தவர் எண்ணிக்கை பதினைந்தாகக் குறைந்துள்ளது

புதிய அமைச்சரவையிலுள்ள மந்திரிகள் பதவி நீக்கப்பட்டவர்களின் பொறுப்புகளையும் ஏற்று நிர்வகிக்குமாறு முதலமைச்சர் பணித்துள்ளார்

இப்புதிய அமைச்சரவை மாற்றத்தைத் தாம் ஏற்றுக்கொள்வதாகத் தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா தெரிவித்துள்ளார்.

திரு எம் ஜி ராமச்சந்திரன் அமெரிக்காவிலிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பி வந்து பொறுப்பேற்ற பின் செய்யும் பாரிய அமைச்சரவை மாற்றம் இதுவாகும்.

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பத்துப் பேரும் தொடர்ந்தும் கட்சி மேம்பாட்டிற்கான பணிகளில் ஈடுபடுவார்களென முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். [சி]

## விமான விபத்திற்கு தென்னாபிரிக்க அரசே பொறுப்பு

### கவுண்டா குற்றச்சாட்டு

**லுசாக்கா, அக்-22.**

மொஸாம்பிக் ஜனாதிபதி சமோரா மசேல் பிரயாணம் செய்த விமானம் விபத்திற்குள்ளாகியதற்கு பிரிட்டோறியா அரசே பொறுப்பென்று ஸாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று லுஸாக்காவில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய அவர் இந்த விபத்துக் குறித்து தனிப்பட்டமுறையில் சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் மொஸாம்பிக் ஜனாதிபதி விபத்தில் மரணமான செய்தி வானொலிமூலம் ஒலிபரப்பப்பட்டதைத் தொடர்ந்து சிம்பாப்வேயில் ஆயிரக்கணக்கான கறுப்பின மக்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருந்தனர்.

இவ்விபத்து தென்னாபிரிக்கா, சுவ ஸிலாந்து பகுதிகளில் இடம்பெற்றதால் ஹராரே நகரில் உள்ள மலாவி தூதரகம், விமான நிலையக் கட்டிடங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் பலத்த தாக்குதலுக்கும் தீவைப்புக்கும் உள்ளாகின.

(6ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க — சோவியத்திற்கிடையில்

# தொடர்ந்து நடைபெறும் வெளியேற்றுநடவடிக்கைகள்

**வாஷிங்டன், அக்-22**

சோவியத் ராஜதந்திரிகள் ஐம்பத்தைந்துபேரை அடுத்த மாதம் 1ம் திகதிக்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

சோவியத்தில் உளவுவேலைகளில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டி ஐந்து அமெரிக்க ராஜதந்திரிகளை கடந்த சில தினங்களுக்குமுன் சோவியத் வெளியேற்றியதைத் தொடர்ந்தே மேற்படி 55 பேரையும் வெளியேறுமாறு அமெரிக்கா பணித்துள்ளது.

கடந்த மாதம் அமெரிக்க பத்திரிகையாளர் திரு நிக்கெஸ் டானிலொவ் உளவுவேலைகளில் ஈடுபட்டிருந்தார் என்று குற்றம்சாட்டி மாஸ்கோவில் கைது செய்யப்பட்டு பல நாட்கள் தடுத்துவைக்கப்பட்டதும், இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஐ நா சபையில் மேலதிகமாக சோவியத் ராஜதந்திரிகள் கடமையாற்றுகிறார்களென்றும் கூறி அவர்களில் 25 பேரை நாட்டிலிருந்து வெளியேற்றியதன்மூலம் அமெரிக்க - சோவியத் நல்லுறவுகளில் விரிசல்நிலை ஏற்பட்டிருந்தது. இரண்டு நாடுகளினதும் நன்மை கருதி பின்னர் நிக்லஸ் டானிலோவைச் சோவியத் அரசு விடுதலை செய்ததும் தெரிந்ததே.

இவ்வாறாக ஒருவர் மாறி ஒருவராக சில வெளியேற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இரு நாடுகளும் தற்போது அதிகளவில் இராஜதந்திரிகளை வெளியேற்றத் தொடங்கியுள்ளன.

இதன்மூலம் அமெரிக்க- சோவியத் நல்லுறவுகளில் பெருமளவு விரிசல் நிலை ஏற்படுமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். [சி]

## உலகச் செய்திகள்

## பஸ் - ரயில் விபத்தில் 35 பேர் பலி

**கராச்சி, அக் 22**

பாகிஸ்தானில் இடம்பெற்ற ரயில் பஸ் விபத்தொன்றில் 34 பேர் கொல்லப்பட்டுள்ளனர்

கராச்சியில் ஐதர பாத்தருகே இவ்விபத்து நிகழ்ந்தது பிரயாணிகளை ஏற்றும் இரண்டு தனியார் பஸ்களிடையே ஏற்பட்ட பலத்த போட்டி காரணமாக ஒன்றை முந்தி ஒன்றாக அதிவேகத்தில் பஸ்கள் சென்றுகொண்டிருந்த வேளையில்...

ரயில்வே பாதை குறுக்கிடும் வீதி ஒன்றின் போடப்பட்டிருந்த தடுப்பையும் மீறிச் சென்ற ஒரு பஸ் ரயிலுடன் மோதுண்டதில் பஸ்ஸில் வந்த பயணிகளில் 35 பேர் ஸ்தலத்திலே பலியானார்கள். (சி)

## பஸ் - ரக் விபத்தில் 26 பேர் பலி

**அங்காலா அக், 22**

துருக்கியில் இடம் பெற்ற பிரயாணிகள் பஸ் 'ரக்' விபத்தொன்றில் 26 பேர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதுடன் 12 பேர்பலத்தகாயத்துடன்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

பிரயாணிகளை ஏற்றி வந்த பஸ் ஒன்றும் சீனிமூடைகளை ஏற்றி வந்த லொறி ஒன்றுமே இவ்வாறு விபத்தில் சிக்கிக் கொண்டன. (சி)

## 21 பேர் சுட்டுக்கொலை

**பெரு அக், 22.**

கெரில்லாக்கள் என சந்தேகிக்கப்படும் 21 பேரை தமது ராணுவம் கொலை செய்துள்ளதாக பெருவியன் அரசு அறிவித்துள்ளது. (சி)

## ரக் விபத்தில் 14 பேர் பலி

**புதுடில்லி, அக் 22**

தொழிலாளர்களை ஏற்றி சென்ற ரக் ஒன்று விபத்தில் சிக்கியதில் சாரதி உட்பட 14 பேர் கொல்லப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் ஆந்திரமாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 150 தொழிலாளர்களுடன் சென்று கொண்டிருந்த இந்த ரக்கில் ஏற்பட்ட சிறு கோளாறு காரணமாகவே விபத்து இடம்பெற்றதாக கூறப்படுகிறது. (சி)

## அன்றும் இன்றும்

# வடக்கும் கிழக்கும் தமிழரின் பாரம்பரியதாயகமாகவுள்ளது

## பத்திரிகையாளர் மகாநாட்டில் 'விஜே'

**[இ. செந்தில்]**

"இலங்கை அரசு அநீதியையே செய்கிறது. சிங்கள அரசியல் வாதிகளின் வற்புறுத்தலினால் பௌத்த குருமாரை பௌத்தர்களே தாக்கியுள்ள சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அத்துடன் சிங்கள அரசியல் வாதிகள் பல சிங்களத் தொழிலாளரின் மரணத்துக்கும் காரணமாயுள்ளனர்."

இவ்வாறு தென்னிலங்கை அரசியல் வாதியும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளருமான திரு. குமாரணதுங்க கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்,

திரு குமாரணதுங்கவுடன் திரு ஓசி அபேகுணசேகர திரு. பீலிக்ஸ் பெரேரா மக்கள் கட்சி சார்பில்வந்த இரு புகைப்படப் பிடிப்பாளர்கள் மற்றும் அமெரிக்காவின் ஏ.பி. செய்திஸ்தாபனம், ஜேர்மனிய தொலைக்காட்சிசேவை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சமூகமளித்திருந்தனர்.


### அரசே காரணம்

தமிழரின் போராட்டம் பற்றிய கேள்வியொன்றுக்கு திரு குமாரணதுங்க பதிலளிக்கையில் இலங்கை அரசாங்கமே தனது நடவடிக்கைகள் மூலம் தமிழ் இளைஞரை தமது உரிமைகளுக்காக ஆயுதமேந்த வைத்தது எனக்கூறினார்.

இலங்கையின் இன்றைய முதலாளித்துவ அமைப்பின் கீழ் எந்தப் பிரச்சனைகளையும் தீர்க்கமுடியாது எனக் கூறிய அவர் தாங்கள் மக்களின் உரிமைகளுக்காக அடிப்படைத் தேவைகளுக்காகத் தொடர்ந்துபோராடிவரப்போவதாகக் குறிப்பிட்டார்.

திரு குமாரணதுங்க தாம் யாழ்ப்பாணம் வருவதற்கு அரசாங்கம் பல முட்டுக்கட்டைகள் விதித்தது என இம் மாநாட்டில் எடுத்துக் கூறினார்.

தாம் தரைமார்க்கமாக யாழ்ப்பாணம் வர ஆலோசித்திருத்ததாகவும், ஆனால் அநுராதபுரத்துக்கும் வவனியாவுக்கு மிடையில் சிங்களக் காடையரினால் தமக்கு ஏதும் நிகழலாம் என்ற அச்சத்தால் தாம்அந்த யோசனையை கைவிட்டதாகவும் கூறினார்.



### இனப்பிரச்னைக்கு தீர்வு

இலங்கை இனப்பிரச்னைக்குரிய தீர்வாக அரசாங்கம்முன் வைத்துள்ள யோசனைகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு திரு விஜே பதிலளிக்கையில் இந்த யோசனைகள் தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஓரளவு தீர்க்கக்கூடியவை எனக்கூறினார்.

"இந்தயோசனைக்கு பெரும்பாலான சிங்களமக்கள் விரும்புகின்றனர். ஸ்ரீ ல. சு. கட்சி அரசாங்கத்தின் மாகாணசபைத் திட்டத்தை எதிர்த்து பொதுக்கூட்டங்கள் நடத்துகின்றது இத்திட்டத்தை ஆதரித்து நாம் கூட்டங்கள் நடத்திவருகிறோம். அவர்களது கூட்டத்திற்கு சமூகமளிக்கும் மக்கள் தொகையை விட மிக அதிகளவிலான மக்கள் எமது கூட்டங்களுக்கே வருகின்றனர்" எனவும்அவர் கூறினார்.

### தமிழர் தாயகம்

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழரின் பாரம்பரிய தாயகம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா எனக்கேட்டபோது திரு. குமாரணதுங்க இப்பகுதிகள் தமிழ்மக்களின் பாரம்பரிய

[6ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

"எங்கள் வெளிநாட்டுப் போதனைகளிலும் பார்க்க உள்நாட்டுச் சாதனைகளே எங்கள் மதிப்புக்கு அளவு கோலாக அமையும்."

— ஜோன் எவ். கெனடி

# நமது நோக்கு

## யாழ். பல்கலைக்கழகம்: விஞ்ஞானக்கல்விக்குண்டான நெருக்கடி

எங்கள் முந்த நாள் பிரசுரத்தில் இது விடயம் பற்றி காணப்படும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரிய சங்க அறிக்கை வாசகர்கள் பலருக்கு புதிராகவே இருக்கும்.

கிரேக்க ஞானி பிளேட்டோவின் படிப்பறை வாசலில் "கணிதம் புரியாதவர்கள் இங்கு உள்ளிடலாகாது" என்று எழுதப்பட்டிருந்தது "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று ஔவையார் எண்ணைத்தான் முதற்கண் வைத்திருந்தார்.

செயல்முறைப் பரீட்சையும் நேர்முகப்பரீட்சையும் என்ற சனியன்கள் ஒழிந்த காலத்தில் கணிதமும், விஞ்ஞானமும் யாழ்ப்பாணப் பொடியன்களுக்குப் பல்கலைக்கழகத்தில் முதலிடம் வழங்கின.

உங்கள் நல்லெண்ணெயோ இந்த அபாரமான கணித்திறமைக்குக் காரணம் என்ற பரிகாசம் பொறியியல்துறையில் பெருமளவில் அனுமதி பெறும் யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்களுக்கு பழக்கமானது. நல்லகாலம் தரப்படுத்தல் ஏற்படுத்திய போராட்டத்தால் இந்த நெருக்கடி அமர்ந்திருக்கிறது.

அக்காலத்தில் இலங்கைக்கே பல்கலைக்கழகம் இல்லாத நிலையில்கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் பிரபலம் பெற்ற பேராசிரியர்கள் சுந்தரலிங்கம், மயில்வாகனம், அமரர் கந்தையா போன்றவர்கள் நாடனைத்திலும் புகழ் பெற்றவர்கள்

கொழும்பிலும், பேராதனையிலும் பின்னர் ஜயவர்த்தனபுர,களனி, யாழ்ப்பாணம், ருகுணை, இன்று மட்டக்களப்பு என்று ஏழு பல்கலைக்கழகங்கள் இருப்பினும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், வளாகமாக விருந்தகாலத்திலேயே, எடுத்த எடுப்பில் பல சாதனைகள் புரிந்தது. இன்றும் ஆகக்கூடிய விஞ்ஞான மாணவர்கள் யாழ்ப்பாணத்திலேயே காணப்படுகின்றனர்.

இயல்பான திறமையுடன் படிப்பில் ஆர்வங்கொண்ட மாணவர்கள், அவர்களில் அசாதாரணமான அக்கறை கொண்ட பெற்றோர், நல்லாசிரியரைக் கொண்ட கலைக்கூடம் கிடைத்து விட்டால் வெளுத்து வாங்குவதில் என்ன வியப்பு?

வாழும் வளரும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு இன்று உண்டான நெருக்கடிக்கு அவசர காரணம் என்ன?

பல வசதியீனங்கள் மத்தியில் இயங்கிவரும் விஞ்ஞானபீடம் இந்த நிலையிலும் ஆற்றிவரும் அரிய பணிக்குப் பயங்கரக் கொள்ளை "உள்ளதையும் கெடுத்தான் 'கொள்ளைக்' கண்ணன்" என்ற அளவிற்கு நிலைகுலைந்துவருகிறது

ஆசிரியர் சம்பள உயர்வு கோரி அநேக போராட்டங்கள் நடத்தினர். இன்று அவர்களின் நிலை 'பரவாயில்லை' எனலாம். பரவாயில்லை என்னும்போது அவர்களுடைய நீண்டகால வறுமையைக் கருத்தில்கொள்கின்றோம். ஆசிரியர் ஒருவரின் பணப் பையைப் (Purse) பிக்பக்கெற் அடித்தவனை நீதவான் அங்கொடைக்கு அனுப்பிய கதை இதற்குச் சான்றாகும்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள், பேராசிரியர்கள் பணம் படைத்தவரென்ற கருத்து இன்றும் நிலவுவதாலேயே இன்று நடைபெற்ற பயங்கரக் கொள்ளை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களைப் பதிக்கிறது.

வாழ்க்கை நடத்துவதற்கே திண்டாடவேண்டிய நிலையில் பலரைப்போல் வெளிநாடு சென்று பணம் தேடும் பணியை நாடாது தமது சேவை தம் மாணவமணிகளுக்குக் கிடைக்க வேண்டிய பெரும் நோக்கம் கொண்டவர்களிடம் கொள்ளையடிக்கத் துப்பாக்கி தேவையா?

யாழ்ப்பாணத்தவர் எவரிடமும் பணமும் நகையும் காசும் உண்டென்பது எந்தக் கொள்ளைக்காரனுக்கும் தெரியும். அவனுக்கு செக்கென்ன சிவலிங்கமென்ன? எனவே, இத்தகைய கொள்ளை, அது குறிப்பிடும் காடைத்தனம் பல்கலைக்கழகத்தைப் பாதிப்பதானால் இன்று எமது உரிமைகளுக்குப் போராடும் பராக்கிரமசாலிகள் இதனைத் தடுத்து நிறுத்துவது மிக அவசியமாகும். பொது மக்களைப் பாதுகாக்கவும், அவர்களின் ஆதரவைப் பெறவும் இது இன்றியமையாதது.

அறிக்கை சரியாகக் குறிப்பிடுவதுபோல் இன்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் 79 ஆசிரியர்களின் வேலையை 19 நிரந்தர ஆசிரியர்களே பகிர்ந்துகொள்கின்றனர். தேவையான இடங்களுக்கு நிதியுண்டு: ஆளில்லை. ஆளில்லாத் துயரம் அழுதாலும் தீராது என்றதுபோல விஞ்ஞானத்தின் பல பிரிவுகளிலும் பணியாற்றவல்ல நிபுணர் ஏற்கனவே நாட்டைவிட்டு வெளியேறினர் இன்றைய நிலையிலும் இன்றும் பலர் வெளியேறுகின்றனர்.

இந்த இக்கட்டான நிலையில அறிக்கை குறிப்பிடுவது போல், 'ஆயுதம் ஏந்தாது போராடும் இன்றைய ஆசிரியர்'களின் தியாக உணர்வுக்கு மக்கள் அனைவரும் ஊக்கம் ஊட்டவேண்டும்.

"எல்லாமிருக்கிறது
பெட்டியிலே;
இலைக்கறி கடையச்
சட்டியில்லை"

என்ற கிண்டலே இன்றைய நிலைமையைக் குறிக்கிறது.

# ஆய்வு நிறுவனம் நடத்திய கால்நடைகள் பற்றிய கருத்தரங்கு

கால்நடை வளர்ப்பை விருத்தி செய்தல் என்ற தலைப்பில் ஆய்வுநிறுவனம் நடத்திய இரண்டாம்நாள் கருத்தரங்கிற்கு டாக்டர் எஸ், எஸ், பாலச்சந்திரன் தலைமை வகித்தார். யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தலைமையுரையில் டாக்டர் எஸ். எஸ். பாலச்சந்திரன் கால்நடைகளின் வளர்ப்பை விருத்திசெய்வது மனிதவாழ்வுக்கு இன்றியமையாதது. கால்நடை என்னும் போது ஆடு, மாடு, கோழி, பன்றி, முயல் என்பன பெரும்பாலும் அடங்குகின்றன. இவற்றை வளர்த்து மனிதர்தமது உயர் வாழ்வுக்கான உணவுவகைகளையும் பிற உபயோகங்களையும் இவற்றால்பெறுகின்றனர். உணவு நெருக்கடி ஏற்படும் போது உயிர்காப்புக்கு நாம் வளர்க்கும் கால்நடைகள் எமக்குஉதவும் என்றார்.

அடுத்து ஆடுவளர்ப்பு பற்றி டாக்டர் கே. கிருபாகரன் பேசுகையில் கூறியதாவது:

"ஆடுகள் ஏழை மக்களின் பசுக்கள் எனச் சொல்லப்படுகிறது. இலங்கையில் ஆடு வளர்ப்பு வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், மலையகத்திலும் பிரபல்யம் அடைந்துள்ளது. ஆட்டுவளர்ப்பை திறந்த வெளிகளிலும், வீடுகளிலும் வளர்த்தும் கொள்கிறார்கள்,

எமது நாட்டின் அடிப்படை இனமாக கட்டையான நன்குமேயும் ஆடுகளை நாம் காணமுடியும். நமதுபிரதேச ஆடுகளின்விருத்திக்காக 1960ல் இந்தியாவிலிருந்து நல்லின ஆடுகள் கொண்டுவரப்பட்டன. ஆயினும் யாழ்ப்பாண குடாநாட்டில் ஏற்பட்ட 'அந்திராக்ஸ்' என்றஆடுகளுக்கேற்பட்ட நோய் காரணமாக ஆடுவளர்ப்புத்திட்டம் தடையாகியது

"1960 - 1970ம் ஆண்டளவில் நல்லினக் கடாக்களிலிருந்து பெறப்பட்ட சுக்கிலத்தை கொண்டு செயற்கைமுறை சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் குறைவாக இருந்ததால் இச்செய்முறையும் விருத்தியாகவில்லை

"மலையகத்தில் மாதிரிக்கலப்பின ஆட்டுப்பண்ணைகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் 1970ம் ஆண்டு தனியார் தோட்ட நிர்வாகத்தை அரசு பொறுப்பேற்றபின் அங்கு விலங்குவேளாண்மை தடைநீக்கப்பட்டாலும் கூட குறிப்பிடத்தக்களவு கால்நடை வளர்ப்பில் மாற்றம் ஏற்பட்டது.

"1978ம் ஆண்டிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தனித்திணைக்களமாக இயங்கத்தொடங்கியவுடன் ஆடுவளர்ப்பு விருத்தி செய்யப்பட்டது. ஆடுகள் ஆடுவளர்ப்போர் சங்கங்கள் மூலம் மக்களுக்குவிநியோகம் செய்யப்பட்டன.

"1984ம் ஆண்டு ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டமூலம் நெதர்லாந்து அரசாங்கம் வடபகுதியில்ஆட்டுப்பண்ணை ஒன்றை அமைக்க கொள்கையளவில் ஏற்றுக்கொண்டபோதிலும் நாட்டு நிலைமை சீரின்மையால் அது பின்போடப்பட்டுள்ளது." என்றார்.

அடுத்து கோழிவளர்ப்பின் தற்போதய செயல் திட்டங்கள் பற்றி டாக்டர் ரி. வர்ணலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

"முன்னைய சில ஆண்டுகளுக்குமுன்பு கோழிவளர்ப்பினால் வரும் லாபங்களையிட்டுமக்கள் அவ்வளவாகத் தெரிந்து கொண்டிருக்கவில்லை.

"பெருமளவில் கோழிகளை வளர்க்கவும் அதை சந்தைப் படுத்தவும் மக்களிடம்பொருளாதார வசதியும் இருக்கவில்லை.

"இன்று பெருமளவு பிரயோசனம் தரும் நல்ல இனங்கள் அன்று நமது நாட்டில் இருக்கவில்லை. கால்நடை வைத்திய நிலையங்களோ, மானியவசதிகளோ கடன் வசதிகளோ இருக்கவில்லை ஆனால் இன்று இவையாவும் மக்களுக்கு கிடைக்கின்றன இன்று கோழிவளர்ப்பு மிகவும் வேகமாகவிருத்தி அடைந்து வருகிறது."

அடுத்து மாடுவளர்ப்புபற்றி டாக்டர் திருமதி ஜி சிவபாதசுந்தரம் தமது உரையில்கூறியதாவது:

"நமது நாட்டில் வீட்டுத் தேவைகளைக் கருதியே மாடு வளர்ப்புநடை பெற்றுவந்தது. ஆனால் இன்று மாடுவளர்ப்பு முழுநாட்டுக்கும் தேவையான ஒன்றாகவும் பொருளாதார விருத்திக்கு உதவும் ஒன்றாகவும் மாறிவருகிறது.

"1978ல் ஐந்து பாற் பண்ணைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இருந்த போதிலும் போதிய ஊக்கம் அப்போது அளிக்கப்படவில்லை. 1978ம் ஆண்டுக்கு பிற்பாடு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் அமைக்கப்பட்ட பின்பு மாடுவளர்ப்பில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

"கோழி வளர்ப்பை ஒரு தனித்தொழிலாகவோ அல்லது ஒரு பக்கத்தொழிலாகவோ மேற்கொள்ளலாம். இதற்கு மனித சக்தியையும் இடவசதியையும்கொண்டே தீர்மானிக்கமுடியும்.

"வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நல்லினக் குஞ்சுகளை நியாயமான விலையில் பெற்று விநியோகிக்க மாதிரிப்பண்ணையும் மின்னடைப்பொறிகளும் செயற்பட்டுவந்தபோதிலும் அவைதற்போது பல்வேறு காரணங்களால் இயங்கவில்லை

"தற்சமயம் எமது கோழிக்குஞ்சுத் தேவையை மற்றைய பிரதேசங்களிலிருந்தே பெறுகின்றோம் கோழிவளர்ப்புக்குத் தேவையான மூலவளங்கள் எமது பிரதேசத்திலே இருக்கின்றன தரமான தொழிற்சாலை இங்கு செயற்படுமாயின் தரமான உணவை கோழி வளர்ப்போருக்கு விநியோகிக்க முடியும் தற்போது உள்ள திருநெல்வேலி பண்ணையினை விருத்தி செய்வதன் மூலம் பயன் மிகப்பெறவாய்ப்புண்டு"

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கால் நடை அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக டாக்டர் கே சி சோமபாலா தமது உரையின்போது கூறியதாவது:-

இலங்கையில் மாடுகள் வரண்ட பிரதேசத்திலேயே 60 விதம் வளர்க்கப்படுகின்றது. ஆனால் 30 வீதமான பாலே சேகரிக்கப்படுகின்றது. இப்பால் சேகரிப்பு குடிசனம் மிகுதியாக உள்ள இடங்களிலேயே செய்யப்படுகிறது.

"கால்நடை வளர்ப்பானது கால் நடைகளை இன விருத்தி செய்தல், பராமரித்தல் உணவூட்டல், உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், உப உற்பத்திகளைத் தயாரித்தல் ஆகிய பல்வேறு அம்சங்களை கொண்ட படிமுறையாகும். இதில் எந்நிலையில் தடங்கலேற்பட்டாலும் கால்நடை வளர்ப்பில் பெரும் பாதிப்பு ஏற்படும்.

"நாட்டு இனங்களிலிருந்து கலப்பு இன விருத்தி மூலம் நல்லினங்களைப்பெற ஐந்து வருடங்களாகும், எனினும் நல்ல பல பிரயோசனங்களைப் பெற 25 வருடகால முயற்சி தேவைப்படுகிறது இவற்றிற்கு நீண்ட காலத் திட்டங்களும் குறுகிய காலத் திட்டங்களிம் தேவை.

"இலங்கை சுவிஸ்சலாந்து கால்நடைத் திட்டம் உலக ஆசிய அபிவிருத்தித் திட்டம், உலக வங்கி பாற்பண்ணை அபிவிருத்தி ஸ்தாபனம், இழுவை மாடுகள் அபிவிருத்தித் திட்டம், தீவிர மாட்டுப் பண்ணை அபிவிருத்தித் திட்டம், இலங்கை-ஜேர்மன் ஆட்டுப்பண்ணை அபிவிருத்தித் திட்டம் மேற் சொன்னவை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலானவை நடைமுறைப்படுத்த ஏற்படுத்தப் பட்டவையாகும்."

## தொகுப்பு: ஐ சண்முகலிங்கம்

"மாடுவளர்ப்பையும் பால் உற்பத்தியையும் பெருக்ககலப்பினமாடுகளே உகவும்உதவும் என்றார்."

ஆடுவளர்ப்பில் தற்போதுள்ள கலைபற்றி டாக்டர் சி. சிறீஜெயகுமார் கருத்துரை வழங்கும்போது ஆடுவளர்ப்பு வரண்ட பிரதேசத்தில் ஓரளவு பிரபல்யம் அடைந்து வருகிறது யாழ் மாவட்டத்தில் கொட்டில்களிலும் கிராமப் புறங்களில் வெளிக்கள முறையிலும் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. ஆனால் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கிழக்கு மாகாணங்களில் பட்டிகளாக வெளிக்கள நிலையில் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன.

"வடக்குக் கிழக்கில் முக்கியமாகக் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆடு வளர்ப்புக்கு மூலவளங்கள் உள்ளதென அறிந்த அரசாங்கம் இரு திட்டங்கள்மூலம் அதாவது இலங்கை, ஜேர்மனி ஆசியஅபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்தி மூலம் ஆடுவளர்ப்பை ஊக்குவிக்க எடுத்த முயற்சி காலநிலை நன்றாக அமையாத காரணமாக நடைமுறைப்படுத்த முடியாததாகியது. 1983ம் ஆண்டு முதல் நல்லின கடாக்கள் காளை நிலையங்களின்மூலம் ஊர் ஆடுகளைச் சினைப்படுத்தின.

ஆடுகளுக்கு வரும்நோய் ஆடுகளின் விருத்திக்குத் தடையாகவுள்ளது. சிறந்த பராமரிப்பு மூலம் நோய் களைக் கட்டுப்படுத்தலாம்" என்றார்

கோழி வளர்ப்புக்கான அபிவிருத்தித் திட்டங்கள் என்ற தலைப்பில் டாக்டர் எம். தங்கராசா உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஆடுவளர்ப்போரின் எதிர்காலத் திட்டங்கள் என்ற தலைப்பில் டாக்டர் திருமதி தங்கராசா உரையாற்றுகையில்; குறுகிய காலத்திட்டம் நீண்ட காலத் திட்டம் என்ற அடிப்படையில் ஆடு வளர்ப்பினை மேற்கொள்ளும் வீட்டுக்கு ஒரு ஆடு என்ற கொள்கை பயனளிப்பதாகும். என்றார்.

கோழி வளர்ப்பின் தற்கால நிலை என்னும் பொருள் பற்றி டாக்டர். திருமதி. எஸ்.

[5ம் பக்கம் பார்க்க]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் இராகுலன் இராஜலிங்கம்

வவுனியா குளோப் டிரேடர்ஸ் உரிமையாளர் திரு. இராஜலிங்கம் - நிர்மலா தேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் இராகுலன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (23-10-86) அண்ணன் சந்திரகாசனுடன் வவுனியாவில் தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, தாத்தாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்திமார், பிரான்ஸ் சித்தப்பாமார், ஜெர்மனி மாமா, மச்சான்மார், கனடா மாமா, அத்தை, மச்சாள்மார், சுவிற்ஸ் மாமா, அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சிமார், மற்றும் உற்றார், உறவினர் யாபேரும் நயினை நாகபூஷணி அம்மன் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.  (A 1498)

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு மாத மறிக்குட்டியுடன் பால் ஆடு விற்பனைக்கு உண்டு. பரமநாதன், 38 சிவப்பிரகாசம் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்.  (C5351)

வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியில் மருகமூர்த்தி விநாயகர் கோவிலடியில் 2 1/2 பரப்பு காணி வீட்டுடன் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு விபரம்: கோபாலபத்தர், யோகேஸ்வரன் "லதா நகை மாளிகை" 423 (247). K. K. S, வீதி சிவன் கோவிலடி யாழ்ப்பாணம்.  (C 5337)

புதிய வெளியீடு
**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30
பழிக்குப்பழி வாங்கும், திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
[Adults Only]

**லிடோ**
தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
பிரபு - நளினி நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
**நியாயம்**

நள்ளிரவில்:

## ரொக்கப்பணம் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், வியா. நள்ளிரவு வேளையில் வீட்டு ஜன்னலை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் இரும்பு அலுமாரியிலிருந்து எண்ணாயிரத்து ஐந்நூறு ரூபா ரொக்கப் பணத்தையும் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் மற்றும் பல ரூபா பெறுமதியான உடுபுடவைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் கடந்த திங்களன்று இரவு நாவலர் வீதி - மூத்ததம்பி அவெனியூவிலுள்ள பற்குணராஜா என்பவரது வீட்டிலேயே இடம் பெற்றது.

மேற்படி சம்பவத்தின் போது வீட்டிலுள்ளோர் உறக்கத்திலிருந்ததாகவும் அதி காலையில் எழுந்து பார்த்த போதே திருட்டுப்போன விடயம் தெரிய வந்ததாகவும் அறியப்படுகிறது.  (எ)

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், வியா. யாழ். கல்வித் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் திரு எம். இமியாம்பிள்ளைக்கு அவரது சேவையைப் பாராட்டி இன்று பிற்பகல் யாழ் கல்வித் திணைக்கள நலன்புரிச் சங்கத்தினர் பாராட்டு விழா ஒன்றை நடாத்துகின்றனர்.  (வா)

## ஐ. நா. தினத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப் பட்டுள்ளதாக யாழ். வர்த்தகசங்கப் பொதுச் செயலாளர் திரு. நமசிவாயம் தெரிவித்தார்,

ஐ. நா. ஸ்தாபனத்தின் உறுப்பு நாடான ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப்படையினர் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக நடாத்திவரும் இனப் படுகொலைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் அன்னையர் முன்னணி விடுத்துள்ள வேண்டுகோளையேற்று அன்றையதினம் வர்த்தக நிலையங்களில் கடமை புரியும் சகலரும் கறுப்புப்பட்டி அணிந்துவேலை செய்வார்கள் எனவும் திரு. நமசிவாயம் மேலும் தெரிவித்தார்.  (ச-ஒ)

## 31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பு



**சின்னத்தம்பி முத்துராசா**

தோற்றம்: 04-06-1925
மறைவு: 22-09-1986

22-9-1986-ல் காலமான முத்துராசவின் அந்தியேட்டி 23-10-86-ல் நடைபெறும். உற்றார்களும் உறவினரும், நண்பர்களும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி மகள்.

குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு

C 5354

## ஒழுங்குவிதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எடுக்கப்படும் என்று மினி சினிமா ஒன்றியம் எச்சரிக்கை செய்துள்ளது.

இது தொடர்பாக மினி சினிமா ஒன்றியம் மேலும் தெரிவிக்கையில்;

நேற்று முன்தினம் மினி சினிமா ஒன்றியத்தின் பரிசோதகர்கள் மினி சினிமாக்கள் மீது நடத்திய திடீர் கண்காணிப்பில் ஒன்றியத்தின் நுழைவுச் சீட்டு இல்லாமல் பணம் மட்டும் பெற்றுத் திரைப் படம் காண்பித்த இரு மினி சினிமா உரிமையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு கடுமையான எச்சரிக்கையின் பின் தண்டனைகள் இன்றிப் படம் காண்பிக்க அனுமதிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளது.  [ஒ]

## ஆய்வு

[4ம் பக்கத் தொடர்ச்சி]

செல்லத்துரை தமது உரையில் கூறியதாவது; "விஞ்ஞான ரீதியில் கோழி வளர்ப்பானது எமது நாட்டில் மிக உயர்ந்த நிலையை அடைந்து கொண்டிருக்கிறது.

"தனியார் நிறுவனங்கள் பல லட்சக் கணக்கான கோழிகளை வளர்க்கிறார்கள். இதனால் முட்டை விலை நாளுக்குநாள் மாறிக் கொண்டு போகிறது. இதனால் குறைந்த எண்ணிக்கையில கோழி வளர்ப்போர் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

1983க்குப் பின் எண்ணெய் கொழும்புக் கூட்டுத்தாபனம் பி. சி. சி. தயாரித்து வழங்கும் கோழித்தீன் வடக்குப் பகுதிகளுக்கு வந்து சேர்வதில்லை. உள்ளூரில் தயாரிக்கும் உணவு பாதாக சில தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் உணவு தரமானதாக இல்லை. மற்றப் பொருட்களைப் போல ஒரு நியாயமான விலையை முட்டைக்குத் தீர்மானிப்பது அவசியமாகும்.

மாடு வளர்ப்பும், பால் உற்பத்தியுமென்ற தலைப்பில் டாக்டர் இ. சு. நவரத்தினம் பேசுகையில்; "அதிகரித்து வரும் எமது வருங்கால தேவையைப் பூர்த்தி செய்யவும், சுய நலத் தேவையில் பூர்த்தியடையவும் வருமானத்தினை அதிகரித்து சமூக பொருளாதார நிலையை வளப் படுத்தவும் உண்மை நிலையான தொடர்ச்சியான வளர்ச்சிக்கேற்ற திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்றார்.

முயல் வளர்ப்பு பற்றி டாக்டர் திருமதி. எஸ். சதாசிவம் பேசியதாவது:-

"இரண்டாம் உலக யுத்தத்தில் பாரிய இழப்புகளைப் பெற்ற ஆசிய நாடான ஜப்பான் உள்ளூர் வளங்களை அபிவிருத்தி செய்வதிலும் உணவுற்பத்தியில் தன்னிறைவடையும் முயற்சியிலும் அதிக கவனம் செலுத்தியதனை குறுகிய காலத்தில் நல்ல நிலைக்கு வளர்த்துக் கொண்டது.

"இந் நிலையில் எமது பிரதேச மூல வளங்களை உபயோகித்து எம் பிரதேசத்தின் பொருளாதார நிலையை உயர்த்துவது அவசியமாகும்.

"எமது பிரதேசத்தில்முயல் வளர்ப்பை பிரதான தொழிலாகக் கொண்டுள்ள பண்ணையாளர்கள் மிகவும் குறைவு. இவ்வளர்ப்பு அநேக இடங்களில் பொழுதுபோக்காகவே மேற்கொள்ளப்படுகிறது.

"வீட்டு முயல் வளர்ப்புப் பற்றிய தரவுகள் கால்நடை வளர்ப்புச் சம்பந்தப்பட்ட தரவுகளை எடுக்கும்போது பெருமளவில் கிடைக்கப்பெறவில்லை.

ஆயினும் முயல் வளர்ப்பு எமது பிரதேசத்துக்கு உகந்த ஒரு தொழிலாகும் இதுபற்றிய விபரங்களை கால்நடை நிலையங்களிலும், பண்ணைகளிலும் பெற்று பொதுமக்கள் நன்மையடையலாம்"  [எ]

## போராளிகள்...

[1ம் பக்கதொடர்ச்சி]

இந்த அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை அரசாங்கம் ஒரு தேசிய காணி ஆணைக்குழுவை ஸ்தாபிக்கவேண்டும், இந்தக் காணி ஆணைக்குழு ஒவ்வொரு அரச காணிப்பாவனைதொடர்பான தேசியக்கொள்கை உருவாக்கத்திற்குப் பொறுப்பாக இருக்கும். இந்த ஆணைக்குழுவில் நாட்டின் சகல மாகாணசபைகளினது பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாகவிருக்கும். இந்த ஆணைக்குழு உருவாக்கும் தேசிய கொள்கையின் பாவனை தொடர்பாக தம்மீது அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாகாணசபைகள் செயற்படுத்தவேண்டும்

தேசிய பிரிவினதும், மாகாணப்பிரிவுகளினதும் வர்த்தமானபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சிங்களம், தமிழ் ஆகிய பாஷைகளில் வரையறுக்கப்பட்டதகுதியைப் பெறவேண்டும் சகல உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் அதற்குமேற்பட்ட உத்தியோகத்தர்களும் ஆங்கிலத்தில் வரையறுக்கப்பட்ட தகுதியைப் பெறவேண்டும்

இலங்கைப் பொலிஸ் படைக்குத் தேர்ந்தெடுக்கப் படும் சகலரும் தமது தாய்ப் பாஷையில் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

முதலாவது பதவியுயர்வு பெறுவதற்கு ஒரு உத்தியோகத்தர் தனது தாய்ப்பாஷைக்கு மேலாக வேறொரு பாஷைக்கு தகுதிகாண்சித்தி பெறவேண்டும். அடுத்த பதவியுயர்வு பெறவதற்கு அவர் மூன்றாவது பாஷையில் தகுதிகாண் சித்தி பெறவேண்டும்.

அரசாங்கத்தின் யோசனைகளில் குறிப்பிடப்பட்ட மூன்று பாஷைகளும் சிங்களம். தமிழ் ஆங்கிலம் ஆகியனவைகளாகும்.  [கே]

## முல்லை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

கடந்த 19ம் திகதி இரவு நடைபெற்ற சம்பவம் குறித்து ஈ. பி. ஆர். எல் எவ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"கடந்த 19ம் திகதி இரவு 7 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள டொலர் பாம் இராணுவ முகாமில் இருந்து மூந்திரிகைக்குள இராணுவ முகாமிற்கு ஜீப் வண்டியொன்றில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது எமது இராணுவப்பிரிவாகிய மக்கள் விடுதலைப்படைத் தோழர்களால் பலத்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒன்றரை மணிநேர துப்பாக்கி சமரின்பின் இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கினர். எமது தரப்பில் எதுவித சேதங்களோ இழப்புகளோ ஏற்படவில்லை".  (மா)

## மன்னார் அடம்பனில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில்தள்ளாடிராணுவ முகாமிலிருந்து பல வாகனங்களிலும், நடந்தும் வந்த 500க்கும் மேற்பட்ட ராணுவத்தினருடன் நாவற்குளம், அடம்பன் பகுதிகளில் வைத்து எமது வீரர்கள் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினருக்கு உதவியாக வந்த ஹெலிகொப்டரினதும், பொம்பர் விமானங்களினதும் தாக்குதல்கள் எம்மவர்களின் எதிர்த்தாக்குதல்களின் மத்தியிலும் இடம்பெறுகிறது.

தொடர்ந்தும் நேற்று இடம் பெற்ற எமது வீரர்களின் தாக்குதல்களால் திருக்கேதீஸ்வரம், மாந்தை ஆகிய பகுதிகளில் இதுவரை 5 ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமுற்றனர்.

எமது தரப்பின் இத்தாக்குதலின் போது விஜி வீரமரணமடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்."

இந்நேரம் வரையும் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன".  (மா)

## இராணுவம் சுட்டு இளைஞர் காயம்

வல்வெட்டித்துறை, புதன் வல்வெட்டித்துறை இராணுவத்தினர் முகாமுக்கு எதிரில் சுமார் 150 யார் தொலைவிலுள்ள புலிகளினால் தகர்க்கப்பட்ட மாடிவீட்டில் மண் மூடை அரண் அமைத்து பதுங்கியிருந்து அவ்வையிலுள்ள வீதியால் பயணம் செய்பவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

இவ்விதம் அப்பாதுகாப்பு அரணிலிருந்து குறிப்பிடப்பட்ட வீதியால் செல்பவர்கள் மீது குறிபார்த்துச் சுட்டதில் செ. குணம் (வயது 21 என்னும் இளைஞர் காயமடைந்தார்.  (ஒ)

## மன்னார்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சிபொதுச்செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்கவிற்கும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குமிடையில் நடைபெற்றபேச்சுக்கள் தோல்வியடைந்ததைத்தொடர்ந்தே இலங்கை அரசு மன்னாரில் போராளிகளுக்கெதிராக பலத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

போராளிகள் கைது செய்து வைத்திருக்கும் இரு இராணுவத்தினர் தொடர்பாக இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த மறுத்ததைத் தொடர்ந்தே திரு. விஜயகுமாரணதுங்க யாழ்ப்பாணம் சென்றார் என்றும் பி.பி.சி தெரிவித்துள்ளது.  (சி)

## மாணவர்முன்னணி நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா

[விளையாட்டு நிருபர்]

பாடசாலை மாணவர்களுக்கிடையில் பரஸ்பர ஒற்றுமையையும் புரிந்துணர்வையும், உடல்வள ஆரோக்கியத்தையும் பேணுவதற்காக மாணவர் முன்னணி நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் 25-ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

25-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டியில் 22-க்கு மேற்பட்ட பாடசாலைகள் கலந்து கொள்கின்றன.

26-ம் திகதி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமாக இரு பிரிவுகளாக நீண்டதூர [மரதன்] ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டி அன்றுகாலை 6 மணிக்கு திருநெல்வேலி (பல்கலைக்கழகச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும்.

மாணவிகளுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நவம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 24-க்கு மேற்பட்ட கல்லூரிகளின் மாணவிகள் கோஷ்டிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உதைபந்தாட்டப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், நிர்ணயிப்பதற்கான கலந்துரையாடல், மேற்படிப் போட்டியில் பங்குபற்றும் 22 பாடசாலைகளின் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர்களிடையே இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.  (வி)

# இறுதிக்கிரியைகளை நடத்திய குரு மரண வீட்டிலேயே மரணம்!

சுழிபுரம், புக
மரணக்கிரியைகளை நிறைவேற்றுவதற்காக மரணவீடு ஒன்றுக்குச்சென்ற குருக்கள் அந்த மரண வீட்டிலேயே கிரியைகளை நடத்துகையில் திடீரென மரணமான சம்பவம் ஒன்று சுழிபுரத்தில் இடம் பெற்றுள்ளது.

சுழிபுரம் மேற்கு வர்த்தகர் ஒருவரின் மரணக்கிரியைகளை நடத்துவதற்காகச் சென்ற என் முத்துக்குமாரசாமி குருக்களே இவ்வாறு மரணமானார்.

வழக்கம்பரையில் வசித்து நீண்ட காலமாக மரண இறுதிக்கிரியைகளை நடத்திவந்த இவர் வழமைபோல் இந்த வர்த்தகரின் மரணவீட்டுக்கும் சென்று மரணக்கிரியைகளை ஆரம்பித்த சிறிது நேரத்தில் இவரது உயிர் அந்த இடத்திலேயே பிரிந்தது.


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள பைனல் ரேணிங் ஸ்தாபன முன்னாள் முகாமையாளர் திரு. மு இராசேந்திரம் தற்பொழுது மேற்படி ஸ்தாபனத்தில் இல்லை என்றும், இத்தாபனம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் எதையும் அவருடன் செய்யவேண்டாம் எனவும் வாடிக்கையாளர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அவர்வசம் உள்ள HMT இந்துஸ்தான் லேத் இயந்திரம் LB 25 / 3000Sg; சைனிஸ் லேத் இயந்திரம் மொடல் 8 / No: 053 300 அம்பியஸ் வெல்டிங் ட்ரான்ஸ்போமர் ஆகியவை இன்றும் எனது உரிமையிலேயே உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மு சுந்தரமூர்த்தி, உரிமையாளர்.
பைனல் ரேணிங் ஸ்தாபனம் (C 5340)



## பிரயாண ஒழுங்குகள்

★ U. K. லண்டன்
★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள். மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார் 25-ம் திகதி பயணம் செய்ய உள்ளோம்.

குவைத்தில் Airport Cleaners (ஏயார் போட் கிளீனேர்ஸ்) ஆக வேலை பார்க்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். செல்ல விரும்புபவர்கள் 24-ம் திகதிக்கு முன்பாக நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-
N. Bala
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

பஸ் இல. 764,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி திவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்கொவடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-1395]


# வடக்கும், கிழக்கும்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
தாயகமாக இருந்தவந்தன: இப்போதும் இருந்து வருகின்றன எனக் கூறினார்.

## கட்சியின் நோக்கம்

''இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு வேண்டிய முயற்சிகளை தமது கட்சி மேற்கொண்டு வருவதாக திரு. குமாரணதுங்க கூறினார். இப்பிரச்னை தொடர்பாக சிங்கள மக்களுக்கு தாம் போதித்து வருவதாகவும் கூறிய அவர் தமது நோக்கத்தில் தாம் வெற்றி பெறுவோமென்ற நம்பிக்கை தமக்குண்டு எனக் கூறினார். இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டியதன் அவசியத்தை சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக தினமும் கூட்டங்கள் நடத்தி வருவதாகவும் கூறினார்,

இரு இராணுவ சிப்பாய்களின் விடுதலைபற்றி கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த குமாரணதுங்க தாங்கள் கொழும்பு சென்று மக்களுக்கு இது சம்பந்தமான நிலைமையை எடுத்துக் கூறவுள்ளதாகவும் அதன் மூலம் இவ்விரு சிப்பாய்களையும் விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசாங்கத்தை வற்புறுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கப்டன் விடுவிக்கத் தயார்

அத்துடன் கோட்டைப் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவல தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இணங்கத் தயாராயிருந்தாரெனவும் அவர் கூறினார்.

நாட்டின் இன்றைய நிலை பற்றிக் கேட்கப்பட்டபோது திரு குமாரணதுங்க பதிலளிக்கையில் இந்த இரு பிரதான சமூகத்தவரிடையே இன்று தொடர்புகளற்ற இடைவெளியொன்று உள்ளது. இப்போது நாங்கள் சந்தித்துள்ளோம். எனவே நாங்கள் இவ்விடைவெளியினை நிரப்பலாம் என்றார் தமது யாழ்விஜயத்தின்போது இங்குள்ள சூழ்நிலையை நேரில் கண்டதாகவும் அதனைத் தாம் கொழும்பு சென்றதும் தென்பகுதி மக்களுக்கு விளக்கிக் கூறுவதாகவும் வாக்களித்தார்

இறுதியாக அண்மையில் நடைபெற்ற அரசியல் கட்சிகள் மகாநாட்டின் 2ம் கட்டத்தில் தமிழும் அரசமொழியாக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனையை மக்கள் கட்சி நிராகரித்ததேன்? என கேட்கப்பட்டபோது அதற்கு அவர் மறுத்ததுடன் ''தமிழ் அரசகரும மொழியாக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. மாறாக தமிழர்க்கும் சம உரிமை கொடுக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தினோம்'' எனக் கூறினார். [எ]

## விமான...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
சிம்பாப்வேயில் ஆழ்ந்த கவலையின் மத்தியில் ஏற்பட்ட கொந்தளிப்பு நிலை காரணமாக வீதிகளில் தென்பட்ட பல வெள்ளை இனத்தவர்களை தென்னாபிரிக்கர்களா அல்லது வேறு நாட்டவர்களா எனத் தெரியாது பலமாகத் தாக்கத் தொடங்கினர் வெள்ளையர்கள் சென்ற கார்களும், ஜீப்களும் தீக்கிரையாக்கப்பட்டன இச்சம்பவங்களின் போது வீதிகளில் ஆயுதந்தாங்கிய பாதுகாப்புப் படையினர் நின்றனர். எனினும் கலகக்காரர்களை அடக்க அவர்கள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை

கடந்த ஞயிறு நடைபெற்ற இவ்விமானவிபத்தில் ஜனாதிபதி மசேல் எப் டி. எவ்வாறு பலியானார் என இதுவரையில் தெரியவில்லை.

கறுப்பின மக்கள் வாழும் ஆபிரிக்க வட்டாரத்தில் இது ஓர் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகுமென பல நாடுகளின் தலைவர்களும் அனுதாபம் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி திரு மசேல் வெள்ளையர் ஆட்சிக்கெதிராகச் செயற்படும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு மொஸாம்பிக்கில் புகலிடமளித்து வந்ததனால் இவர்மேல் தென்னாபிரிக்க அரசிற்கு ஓர் எரிச்சல் நிலை ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மசேலின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது [சி]


## பிரயாண ஒழுங்குகள்

கனடா: புறப்படும் திகதி 25-10-1986
டென்மார்க்: 25-10-1986
மற்றும்
ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி
வாராவாரம் அழைத்துச் செல்கின்றோம்.

லிப்றுஸ் லிமிட்
[R. G. பில்டிங்]
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[A-2810]



## GLORIA TRAVELS

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

எமது பிரயாண முகவர் அழைத்துச்செல்வார்;

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS,
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

A 1391



உ

## மங்களகரமான ஆரம்ப விழா

# ASIANS COMMUNICATIONS

22, KANNATHIDDY, JAFFNA.

அன்புடையீர்!
24-10-1986 வெள்ளிக்கிழமை பி. ப. 3-30 மணி தொடக்கம் 4-00 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தின் முன்பாக கன்னாதிட்டியில் அமைந்துள்ள புதிய கட்டிடத்தில்
''ஏசியன்ஸ் கொம்யூனிக்கேசன்ஸ்''
என்னும் சர்வதேச, உள்நாட்டுத் தொலைபேசிச் சேவையை வழங்கும் ஸ்தாபனம்
DR. A. சோமசுந்தரம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.
அத்தருணம் அன்பர்கள் யாவரும் வருகைதந்து ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமும் நல்லாசியும் அளித்து உதவும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் அன்புக்குரிய மேற்படி ஸ்தாபன உரிமையாளர்கள். (C 5345)

# "எமது நிபந்தனைகளை அரசு மறுத்தால் மாற்று நடவடிக்கை எடுப்போம்"

## 'கிட்டு' வலியுறுத்து

(அலுவலக நிருபர் ஏ. வி. மாணிக்கம்)

"மனிதாபிமான அடிப்படையில் நாங்கள் விடுத்த நிபந்தனைக்கமைய அரசாங்கம் கைது செய்து சிறைவைத்திருக்கும் போராளிகள் இருவரை விடுதலை செய்யுமானால் எங்கள் வசமிருக்கும் இரு இராணுவச் சிப்பாய்களையும் விடுதலை செய்வோம்" எமது நிபந்தனையை அரசு நிராகரிக்குமானால் மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ். குடாநாட்டுத் தளபதி திரு கிட்டு தெரிவித்துள்ளார்.

மன்னார் அடம்பனில் நடைபெற்ற நேரடிப் போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் கைதுசெய்யப்பட்ட இரு இராணுவ சிப்பாய்களையும் விடுதலைசெய்வது சம்பந்தமாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சி செயலாளர் திரு விஜயகுமாரணதுங்க குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

வடக்கில் உரிமைக்காகப் போராடும் உங்களை தென்னிலங்கை மக்கள் பயங்கரவாதிகள் என்று கூறுகிறார்கள். ஆதலால் உங்கள் வசம்சிறைப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இரு இராணுவ சிப்பாய்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று திரு விஜயகுமாரணதுங்க, யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் இயக்க தளபதி திரு. கிட்டுவிடம் விடுத்த வேண்டுகோளினடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பேச்சுக்கள் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்றது.

திரு. கிட்டு மேலும் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம், மன்னார் பொலிஸ் நிலையங்களை எமது போராளிகள் தாக்கியபோது சரணடைந்த மூன்று பொலிசாரையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்தோம்.

நேரடிச்சமரில் எம்மால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 சிப்பாய்களின் சடலங்களை மனிதாபிமான அடிப்படையில் பக்குவமாக யாழ் கோட்டை இராணுவமுகாம் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தோம்.

### இவர்கள் எம்மிடம் சரணடைந்தவர்கள்

இந்த இரு சிப்பாய்களும் தங்களால் முடியாத கட்டத்தில் எம்மிடம் சரணடைந்தமையால் மனிதாபிமான அடிப்படையில் கைதுசெய்து நன்றாகப் பராமரித்து வருகிறோம். இரு சிப்பாய்களும் களத்தில் துப்பாக்கியுடன் யுத்தம்புரிந்தவர்கள். நாங்கள் நினைத்திருந்தால் இருவரையும் சுட்டுக் கொன்றிருக்கலாம். நாங்கள் அப்படிச் செய்யவில்லை; செய்யவும் மாட்டோம்: மனிதாபிமான அடிப்படையில் வைத்திருக்கிறோம்.

இதன்பேரில் நாங்கள் விடுத்த நிபந்தனை மிகவும் குறைவானது. எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று 15 போராளிகள்மட்டில் அரசாங்கம் கைதுசெய்து சிறைவைத்திருப்பதாக அறிகிறோம். இவர்களின் பெயர், விலாசம், கைதுசெய்யப்பட்ட திகதி, எங்கே கைதுசெய்யப்பட்டவர்கள் என்ற விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை எம்மிடம் தரும்பட்சத்தில் விடுதலை செய்ய வேண்டிய போராளிகளின் பெயர்களைச் சிபாரிசு செய்வோம் என்பதே நிபந்தனை.

ஆனால் அரசாங்கமோ 11 பேரின் பெயர்ப் பட்டியலைப் பிழையான முறையில் தயாரித்திருக்கிறார்களாம்.

எமது நிபந்தனை போல சர்வதேச மட்டத்திலும் கடந்த காலங்களில் நிகழ்ந்திருக்கிறது.

### உண்மைகளை அரசு திரிபுபடுத்துகிறது

"அடம்பனில் கைப்பற்றப்பட்ட 9 பேரின் சடலங்களையும் யாழ். கோட்டை இராணுவமுகாம் பொறுப்பதிகாரி காப்டன் கொத்தலாவலையிடம் நாங்கள் நேரில் ஒப்படைத்திருந்த போதிலும் இந்த அரசாங்கம் அடம்பன் காட்டுக்குள் தாங்கள் கண்டுபிடித்து மீட்டதாகத் தெரிவித்தது. இத்தகவலை சகல அரச தகவல் நிலையங்களும் வெளியிட்டன.

"சிங்கள மக்களுக்கு எங்களின் மனிதாபிமான நிலைப்பாட்டைத் தெரிவிக்கவேண்டுமென்பதற்காக சடலங்களை ஒப்படைத்திருந்தோம்.

"இதுபோன்று பல உண்மை சம்பவங்களை இந்த அரசு திரிபுபடுத்துகிறது.

"நாங்கள் அரசியல்வாதிகளை மதிக்கவில்லை. ஆனால் எமது எதிரியாக இருந்தாலும் யாழ் கோட்டை இராணுவமுகாம் பொறுப்பதிகாரி காப்டன் கொத்தலாவல போன்றவர்களுக்கு மதிப்பளிக்கின்றோம்.

### எமது நிபந்தனைகளை 'கொத்தலாவலை' ஏற்றுள்ளார்

"இரு சிப்பாய்களையும் விடுவிப்பது சம்பந்தமாக விதித்த நிபந்தனைகளைக் கப்டன் கொத்தலாவலை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால் அரசாங்கமோ நிபந்தனையை அங்கீகரிப்பதாகத் தெரியவில்லை. அதற்காகத்தான் உங்களை அணுகினோம். வரவேற்றோம். நீங்கள் நிபந்தனை சம்பந்தமாக சுமுகமான ஒருமுடிவுடன் மீண்டும் வாருங்கள். இந்த இரு சிப்பாய்களின் பெற்றோர்களையும் அழைத்து வாருங்கள்.

### நாங்கள் பயங்கரவாதிகளல்ல

"எமது கருத்தைத் தென்னிலங்கை மக்களுக்கும் அரசுக்கும் விளக்கமாக எடுத்துச் சொல்லுங்கள் நாங்கள் பயங்கரவாதிகளல்ல; எமது இனத்தின் விடுதலைக்காகவும், எமது மண்ணை மீட்டெடுப்பதற்காகவும் உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கும் போராளிகள், எமது உரிமையை வென்றெடுக்க களத்தில் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைவீரர்கள் நாங்கள்.

### மீண்டும் வருவேன்

"இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டுப்பேசிய திரு. விஜயகுமாரணத்துங்க, தென்னிலங்கை மக்களுக்கு வடக்கு-கிழக்கில் நடக்கும் பிரச்சினைகள் நன்கு தெரிவதில்லை. நீங்கள் நியாயமான போராட்டம் நடத்துகிறீர்கள் என்பது என்போன்ற ஒரு சிலருக்குத்தான் தெரியும். உங்கள் போராட்டம், சிப்பாய்களை விடுவிப்பது சம்பந்தமாக விடுக்கப்பட்ட நிபந்தனை ஆகியவற்றையெல்லாம் எமது மக்களுக்கும் அரசுக்கும் விரிவாக எடுத்துச்சொல்வேன். மீண்டும் உங்களிடம் வருவேன்" என்று உணர்ச்சிததும்பச் சொன்னார்.

(மா)

---

# கேள்வி அறிவித்தல்

## பாலருக்கும், மாணவர்களுக்குமான உருக்குக் கதிரைகள் வழங்கல்

பாலருக்கும், மாணவர்களுக்குமான கீழே குறிப்பிட்டிருக்கும் உருக்குக் கதிரைகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏதாவது அரசாங்க திணைக்களங்களில் உருக்குத் தளபாடங்கள் வழங்குநராகப் பதிவு செய்துள்ளவர்களிடமிருந்து யாழ்ப்பாணம் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கூறுவிலைகளை (இணைப்படிவங்களில்) ஏற்றுக் கொள்ளுவார்

1. பாலருக்கான உருக்குக் கதிரைகளை வழங்கல். (கணியப்பட்டியல், விபரக்கூற்றுக்கள், நிபந்தனை என்பவற்றை யாழ்ப்பாண கல்வித் திணைக்கள கணக்காளரிடம் பார்வையிடலாம்)

II. மாணவருக்கான உருக்குக் கதிரைகளை வழங்கல். (கணியப்பட்டியல், விவரக்கூற்றுக்கள், நிபந்தனைகள் என்பவற்றை யாழ்ப்பாண கல்வித்திணைக்களக் கணக்காளரிடம் பார்வையிடலாம்)

02. திட்டவட்டமான கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு (01) மாத காலத்துக்குள் விபரக்கூற்றுப் பிரகாரமான வழங்கல் முடிக்கப்பெறுதல் வேண்டும்.

03. மேல் விவரங்களை யாழ்ப்பாணம், கல்வித்திணைக்களக் கணக்காளரிடமிருந்து 1986 ஐப்பசி மாதம் 27ம் தேதியுட்பட அத்தேதிவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

04. கூறு விலைகளைத் திறத்தல்
கூறு விலைகளைத் திறக்கும்போது கேள்வியாளர்கள் சமூகமாகவிருக்கலாம். சமூகமளித்திருக்கும் கேள்வியாளர்களுக்கு கூறு விலைகள் வாசித்துக் காட்டப்படும். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் பிரதிகளை ஆராய்ந்தறிய அவர்கள் அனுமதிக்கப்படுவர். 1986, ஐப்பசி மாதம் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02-00 மணிக்கு கூறு விலைகள் திறக்கப்படும்.

இ. சுந்தரலிங்கம்
பிரதேச கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
1986-10-21.

[A 1493]

---

சட்டவிரோத மின்பாவனை:

# மாதகலில் தாயும் மகளும் மின்சாரம் தாக்கி மரணம்

யாழ்ப்பாணம் வியா:

மாதகலில் சட்டவிரோத மின் பாவனையால் ஒரு தாயும் மகளும் மின்சாரம் தாக்கி மரணமானார்கள்.

இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:-

மின்சாரம் தாக்கி தாய் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானித்த மகள் தாயாரைப் பிடித்திழுத்தாராம். இதனால் மகளும் தாயும் மின்சாரத்திற்குப் பலியானார்கள்.

இச்சம்பவத்தினையறிந்த விடுதலை இயக்கப் போராளிகள் மின்சாரசபை ஊழியரின் உதவியுடன் குறிப்பிட்ட பகுதியில் சட்டவிரோத மின் வயர்களை அறுத்தெடுத்ததுடன், சட்டவிரோத மின் பாவனையாளர்கள் பலரையும் எச்சரிக்கை செய்துள்ளனர். (ஓ)

---

# இன்றைய பலன்

மாதம்- ஐப்பசி
திகதி- 6 (23-10-1986)
கிழமை- வியாழன்
திதி- பஞ்சமி காலை 8-45ன் ஷஷ்டி
நஷத்திரம்- மிருகசீரிடம் மு ப. 11-07ன் மேல் திருவாதிரை

மேடம்- மனம்போல்வாழ்வு இன்று மலரும். சிலருக்குப் பதவி உயர்வுக்கு இடமுண்டு செய்காரியங்கள் புகழ் குவியும்.

இடபம்- அவப்பெயருக்கு இடமுண்டு. முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை தோன்றும். நண்பர்களாலும் நஷ்டத்திற்கிடமுண்டு.

மிதுனம்- ஆசாரக் குறைவுக்கு இடமுண்டு. மனப் போராட்டம் அதிகரிக்கும் குடும்பக்கவலை தோன்றும்

கடகம்- சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்தும் நீண்டநாள்பிரச்சினை இன்று தீரும். குடும்பவாழ்வும் மலரும்.

சிங்கம்- மனதில் அமைதி குலையும் மனையிலும் பூசல்கள் தோன்றி மறையும், எதையும் பொறுமையுடன் செயல்படுத்தவும்

கன்னி- தாய்வழிப் பெருமையுண்டு. தன் தொழில் சிறப்புமுண்டு. வாகன சுகமுமுண்டு

துலாம்- புத்திரர் புகழும் கிட்டும் புண்ணிய விருப்பமுண்டாம். தொழில் முன்னேற்றமமுண்டு

விருச்சிகம்- இதயச்சுமை அதிகரிக்கும் அரசயத்திற்குமிடமுண்டாம். குடும்பப் பிணக்குகளும் தோன்றலாம்.

தனுசு- பெரியவர்கள் ஆசியுடன் வாழ்வும் மலரும். புதிய எண்ணங்களும் தலைதூக்கும். கடமையிலும் விருத்தி காணும்.

மகரம்- கருடப் பார்வை வட்டமிடும் சிறுபிணி வாட்டும். தொழில்கேடும் விளையும்.

கும்பம்- குருவின் அறிவுரை வாழ்க்கைக்கு வழிகாட்டும். தெய்வ வழிபாடும் மேலிடும். தொழில் சமவிருத்தியுமுண்டாம்

மீனம்- தொழில் மகிழ்ச்சியுண்டு. தொல்லைகள் நிவர்த்தி பெறும். மனைவாழ்வும் சிறக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

# வேலம்பராய் கண்ணகை அம்மன் கோவில்

## பரிபாலன சபை

யாழ்ப்பாணம், வியாழன்.

வேலம்பராய் கண்ணகை அம்மன் கோவில் பரிபாலன சபைப் பொதுக்கூட்டம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோவிலாக்கண்டி மகாலக்குமி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவர் திரு சோ சடாட்சரம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை வாசித்துக்காட்டி தற்போதுகோவில் இருக்கும் நிலைமையையும் விளக்கி, இக்கோயிலைப் பரிபாலிக்க கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, நாவற்குழி, கைதடி, ஆகிய பகுதிகளை உள்ளடக்கி ஒரு பரிபாலனசபையைத் தெரிய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

பின்வருவோர் பரிபாலன சபையினராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு வே சடாட்சரம் செயலாளர் திரு ந இராமலிங்கம், பொருளாளர் திரு. சி தில்லைநாதர் 24 பேர் கொண்ட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டது.

திருப்பணிச்சபை உறுப்பினர்களாக தலைவர், செயலாளர், பொருளாளருடன் திரு பொ சுப்பையா திரு செ. நாகரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கோவில் இப்பகுதி மக்களின் ஒரு பொதுவழிபாட்டுத் தலமாக விளங்குவதன் எல்லோரதும் பூரண ஒத்துழைப்புடனேயே இதனைப் புனருத்தாரணம் செய்ய முடியும் என்றும் செயலாளர் திரு. ந இராமலிங்கம் விளக்கிக் கூறி, எல்லோருக்கும் நன்றியும் தெரிவித்தார்.

---

# வீமன்காமம் ம. வி. நான்காவது தடவையாக முதலிடம்

தெல்லிப்பழை புதன்

கல்வித் திணைக்களத்தால் மாவட்ட ரீதியாக வருடா வருடம் நடாத்தப்பட்டுவரும் பாடசாலைகளுக்கிடையேயான இசை நடன, நடகப் போட்டிகளில்; இசை நாடகப் போட்டியில் வீமன்காமம் மகாவித்தியாலயம் கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ந்து முதலிடத்தைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளது. இவற்றை நெறிப்படுத்தி வெற்றிகரமாக அரங்கேறச் செய்தவர் இசை ஆசிரியை திருமதி இ. சிங்கராஜா ஆவர் இத்துடன் மேற்பிரிவுக் கிராமியஇசையில் செல்வி ந கேதீஸ்வரியும் ஆரம்பபிரிவு புதிய ஆக்க நடனப் போட்டியில் செல்வி பா. ஜெயத்திரியும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வித்தியாலயம் அண்மையில் நடந்தேறிய மாவட்ட ஆங்கில தினப்போட்டிகளிலும் ஏழு முதலிடங்களைப் பெற்று சென்ற வருடத்தினைப் போன்று இவ்வருடமும் முன்னணி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

---

# பரீட்சை

யாழ்ப்பாணம் வியா:

இலங்கை நூலகவியல் சங்கத்தின் நூலகவியல் முதல் பரீட்சை நவம்பர் மாதம் 22, 23ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எந்தவருடத்திலாவது ஒரு வருடப்பரீட்சை நெறியைப் படித்து முடித்தவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம் என்றும் நூலகச்சங்கம் அறிவித்துள்ளது. (ஔ)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 23-10-86

## யாழ். தொலைபேசித் தொடர்பு சீர்கேடு:

# யாழ். ஆஸ்பத்திரி அவசர தேவைகள் பெறுவதில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையின் அவசர தேவைகளுக்கும், மற்றும் மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கொழும்பிலுள்ள போதனா வைத்தியசாலை அதிபருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாதிருக்கிறது. இதனால் நோயாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு யாழ். அ போ வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் நச்சினார்க்கினியர் கவலை தெரிவிக்கின்றார்

கொழும்பிலிருக்கும் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இத் தேவைகளைப் பெறுவதற்குத் தொலைபேசியை எடுத்தால் அவை வேலை செய்வதாக இல்லை. தொலைத் தொடர்பு நிலையத்தில் இது பற்றி விசாரித்தால் "கொழும்பு லையின் அவுட்" என்கிறார்கள்.

ஆனால் தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களை கொழும்புக்கு ஹோல் எடுக்க முடியுமா என்று கேட்டால் உடனே எடுக்க முடியும் என்கிறார்கள்.

அரச நிர்வாகமான ஆஸ்பத்திரி ஊழியர்களாகிய நாம் அவசர தேவையாயினும் தனியார் தொலை பேசிகளைப்பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்வது நிர்வாகச் சிக்கலுக்குரியது என்பதனை யாவரும் அறிவார்கள் எனத் தெரிவித்த பொறுப்பதிகாரி யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒரே சமயத்தில் பல "லையின்"களில் வேலை செய்கிறது என்று சொல்லப்படுகிறது; அப்படியானால் ஆஸ்பத்திரிக்கு அவசர தேவைகளுக்கு ஒரு லைன் கூடக் கிடைப்பது கஷ்டமாகவுள்ளது இது ஏன் என்றும் கேட்கின்றார். (ச)

## ஈழம் முத்திரை:

### ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்
ஈழ முத்திரைகளை மொத்தமாகக் கொள்முதல் செய்ய விரும்புகிறவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளும்படி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது

மேற்படி இயக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் 25-ம் திகதி முதல் சிறிலங்கா முத்திரைகள் குடாநாட்டில் உள்ளூர் சேவைக்கு முற்றாகத் தடைவிதித்திருப்பதாகவும், ஈழம் முத்திரைகளை மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புகிறவர்கள் யாழ்ப்பாணம், ஸ்ரீதர் தியேட்டரிலுள்ள மினி சினிமா ஒன்றிய தலைமையகத்துடன் தொடர்புகொள்ளும்படியும் கேட்டுள்ளது.

## அரச படைக்கு தமிழ்மொழி போதனை

கொழும்பு, புதன்
இராணுவம், பொலிசாருக்கு தமிழ்மொழியை போதிப்பதற்கான நிறுவனமொன்று வெகு விரைவில் நிறுவப்படவுள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

திரு. அத்துலத்முதலி இது தொடர்பாக சமர்ப்பித்த ஆலோசனையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்தே இந்நிறுவனம் நிறுப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (சி)

## வர்த்தகர் சங்கம் 750 சாக்குகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்
அராலித்துறையில் வீதி அமைப்பதற்கு மணல்போடுவதற்காக யாழ். வர்த்தகர் சங்கம் 750சாக்குகளை பெருந்தெருக்கள் திணைக்கள பொறியியலாளரிடம் நேற்றுக் கையளித்துள்ளது. [ச]

# பற்றி பழுதடைந்தமையால் தொலைபேசி இயங்க மறுப்பு

யாழ்ப்பாணம், வியாழன்:
யாழ். அரசினர் வைத்தியசாலையில் இயங்குகின்ற தொலைபேசிகள் மின்சாரத் தடை ஏறபடும்போது அவைகளை இயக்கும் பற்றிகள் மிகவும்பழுதடைந்திருப்பதால் இயங்காதிருக்கின்றன.

இதனால் சத்திரசிகிச்சைக் கட்டடத்திற்கு வார்ட்டுகளுக்கும் மற்றும் அவசரப்பிரிவுகளுக்கும் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாதிருக்கின்றதென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

பழுதடைந்த பற்றிகளை மாற்றித்தருமாறு தொலைபேசித்தொடர்பு அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் பற்றிகள் இல்லையெனக் கைவிரிக்கின்றார்களென அவ்வட்டாரம் மேலும் கூறின, [ச-கே]

## சந்திப்பு

லண்டன், அக் 22
லண்டனுக்கு விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள எதிர்க் கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான யங் சீமாட்டியை நேற்றுச் சந்தித்தார்

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சுதந்திரக் கட்சியின் கருத்துக்களை யங் சீமாட்டியிடம் இச்சந்திப்பின் போது திரு. பண்டாரநாயக்கா விளக்கிக் கூறியதாகத் தெரிய வருகிறது. (ஊ)

## படையினர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

8 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களுக்குள்ளானார்கள். அன்று மாலை 7 மணிவரை இடம்பெற்ற எமது தாக்குதலின் இறுதியில் கொம்மாந்துறை வழியாக கொமாண்டோக்கள் பின்வாங்கினர் பின்வாங்கும் போது கொமாண்டோக்களின் ஜீப்வண்டிகள் சில சகதியில் சிக்கிக்கொள்ள அச்சமயம் அவ்வழியாக வந்த மினி பஸ் ஒன்றை நிறுத்தி பயணிகளை இறக்கியபின்பு அதில் காயமடைந்தவர்களையும், இறந்தவர்களின் உடல்களையும் ஏற்றிக்கொண்டு சென்றனர் பின்னர் தமது ஜீப்வண்டிகளை மீட்டுச்சென்றனர். (மா)

## அரசு அறிக்கை

கொழும்பு.புதன்
ஏரடியனூறு மகிழ வெட்டுவான் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது தமிழ்ப் போராளிகள் தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் கான்ஸ்டபிளான ரி. என். ஏ சமரட்ண பலியானதுடன் இன்னொரு பொலிஸார்காயமடைந்துள்ளதாக அரச தரப்பு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லடிப் பகுதியில் வழமையான ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது தமிழ்ப் போராளிகள் குண்டுத் தாக்குதலை நடத்தியபோது பொலிஸாரில் ஒருவர் படுகாயமடைந்ததாகவும் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

# மரண அறிவித்தல்

### திரு. கனகசிங்கம் தர்மலிங்கம்

கோப்பாயைச் சேர்ந்த திரு கனகசிங்கம் தர்மலிங்கம் (முன்னாள் இளைப்பாறிய அஞ்சல் திணைக்கள பதவிநிலை உதவியாளர் S A (22-10-86) புதன்கிழமை காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாமதி, தவரூபன், அழகேசன், திருக்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசிங்கம், இளையபிள்ளையின் அன்பு மகனும், கோப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவபாக்கியத்தின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 23-10-86 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தவரூபன்.
(C 5356)

### திருமதி இலட்சுமிதேவி மாணிக்கவாசகர்

திருமதி இலட்சுமிதேவி மாணிக்கவாசகர் காலமானார். இவர் காலஞ்சென்ற முன்னாள் தெல்லிப்பழை கிராமசபைத் தலைவர் தில்லையம்பலம் மாணிக்கவாசகரின் மனைவியும், சுகன்யா, தேவகன்யா (ஆசிரியை, வறுத்தலைவிளான் A M T·M S), வரராசசிங்கம் (நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி), தில்லையம்பலம் (பட்டயக் கணக்காளர், சாம்பியா) அவர்களின் தாயாரும், சிவசுப்பிரமணியம் (பொலிஸ் காரியாலயம், யாழ்ப்பாணம்), குலசேகரம் (கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்), பத்மாவதி (ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), சியாமளா ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் [23-10-86] இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு உதவி அரச அதிபர் ஒழுங்கை தெல்லிப்பழையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று கொத்தியால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: மா.வரராசசிங்கம்.
[C 5353]

### திருமதி பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்

நீர்வேலியைச் சேர்ந்த திருமதி பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை, அத்தியார் இந்துக் கல்லூரி) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பண்டிதர் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி இராசேஸ்வரி குணசிங்கம் (ஆசிரியை), நாகேஸ்வரி கந்தசாமி (கச்சேரி, யாழ்ப்பாணம்), கலாநிதி விநாயகலிங்கம் (முன்னைநாள் விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம், தற்போது மேற்கிந்திய தீவு பல்கலைக்கழகம்) ஆகியோரின் தாயாரும், திரு. குணலிங்கம் (புகையிரத நிலையம், யாழ்ப்பாணம்), திரு வி கந்தசாமி (கணக்காளர் திணைக்களம், கொழும்பு), திருமதி ரதிதேவி (முன்னைநாள் ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, திருவையாறு கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும், பாபினி, ஜனகன், சேயோன், ஆரூரன், முகுந்தன், அமுதன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (23-10-86) வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்கும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

து. விநாயகலிங்கம் (மகன்)
[C-5355]

# மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம்

திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் 21-10-86ல் காலமானார். இவர் காலஞ் சென்ற சுப்பிரமணியத்தின் (கணக்காளர், புகையிரதப் பகுதி) அன்பு மனைவியாவர். ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்: த.குணசிங்கம், 23, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(C 5357)

### சபாபதிக்குருக்கள் வைத்தீஸ்வரசர்மா

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தினதும், பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் அர்ச்சகருமாய பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா 20-10-86 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்தார். அன்னார் சுப்புலக்ஷ்மி அம்மாளின் அன்புக் கணவரும், சந்திரா, கலா, நித்தியானந்தக் குருக்கள், விஜயகுமார சர்மா, வனஜா, உஷா ஆகியோரது அன்புத் தந்தையும், குமாரசாமி சர்மாவினதும், சீதாவினதும் அன்பு மாமனாரும், ஸ்ரீ வித்தியா, ஸ்ரீ பாலச்சந்திரன், ஸ்ரீ ரஞ்சனி, ஸ்ரீ ரம்யா, கல்பனா, கோகுலகிருஷ்ணனதும் அன்புத் தாத்தாவுமாவார். அன்னாரது பூதவுடல் 23-10-86 (இன்று) பொன்னாலை "ஸ்ரீ யந்திரம்" இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று திருவடிநிலையில் நண்பகல் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்: நித்தியானந்தக் குருக்கள்,
விஜயகுமார சர்மா.
(புதல்வர்கள்)
[C-5358]

### நாகலிங்கம்பிள்ளை விசாகசேயோன்

விசாகசேயோன் காலமானார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய தபால் அதிபர் நாகலிங்கம்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், இராசலட்சுமி சபாரட்ணம், வேதாரணியசேயோன், வேலாயுதசேயோன், தனலட்சுமி குணநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சபாரத்தினம், குணநாயகம், ஜெகதீஸ்வரி, சீதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (23-10-86) பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்: இராசலட்சுமி சபாரத்தினம்,
செங்கமலம், வல்லை றோட், அச்சுவேலி.
[C-5359]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126